# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

***********

**முறையீட்டு மனு எண்.68/2019/பே**
**ஆணை நாள்: 18 –07–2019.**

திரு K. சுந்தர்ராஜ்,
த/பெ திரு.குள்ளப்பிள்ளை,
தாங்கல் ஏரி, காட்டுக்கொட்டாய்,
அக்கராபாளையம்,
வடக்கநந்தல் அஞ்சல்,
சின்னசேலம் (வழி)
விழுப்புரம் மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
வடக்கநந்தல் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம். --- எதிர் மனுதாரர்.

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், வடக்கநந்தல் பேரூராட்சி, தாங்கல் ஏரி காட்டுக் கொட்டாய் பகுதியினைச் சேர்ந்த திரு.கே.சுந்தர்ராஜ், த/பெ திரு. குள்ளப்பிள்ளை என்பவரது 15.04.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.04.19 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 68/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.கே.சுந்தர்ராஜ், முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில் தான் வடக்கநந்தல் பேரூராட்சி 9–வது வார்டில் வீட்டு வரி, சொத்து வரி செலுத்துவோரின் பெயர் மற்றும் முகவரி, சொத்தின் தன்மை குறித்த விவரங்கள் கேட்டதாகவும், அதற்கு பேரூராட்சி செயல் அலுவலர் தனி நபர் குறித்த விவரங்கள் தர இயலாது என தெரிவித்ததைத் தொடர்ந்து, பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு மனு அளித்ததாகவும், அவரும் உரிய கால கெடுவிற்குள் தகவல் அளிக்க ஆணையிட்டதாகவும், அதற்கும் தனக்கு தகவல் அளிக்காத நிலையில் தான் மாநில தகவல் ஆணையத்தில் 24.01.2017ல் முறையீடு செய்ததாகவும், இதன் அடிப்படையில் 20.12.2018ல் பேரூராட்சி செயல் அலுவலர் ஆஜரானதாகவும் மாநில தகவல் ஆணையம் முன்பாக தான் கோரிய தகவல்களை 15 தினங்களுக்குள் தர வாக்குறுதி அளித்ததாகவும், ஆனால் பேரூராட்சி செயல் அலுவலர் 10.03.2019 அன்று தனக்கு முழுமையான தகவல் அளிக்காமல், ஒரு தகவல் மட்டும் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தான் தகவல் கேட்டமைக்கான நோக்கம் வடக்கநந்தல் பேரூராட்சி, அக்கராபாளையம் கிராமத்தில் வசிக்கும் திரு.வெள்ளையபிள்ளை குமாரர் திரு.பெரியசாமி என்பவர் கான்கிரீட் வீடு கட்டியுள்ளதாகவும், வீடு கட்டும் போது குடிநீர் இணைப்பு பெற்று மின் மோட்டார் பயன்படுத்தப்பட்டதாகவும், அது எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்பது குறித்தும், அவருக்கு சொத்து வரி விதிக்கப்பட்ட விவரமும் கோரியதாகவும் தெரிவித்து தனது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி கோரிய விவரங்களை

முழுமையாக தனக்கு அளிக்க பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிட தெரிவித்து தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், வடக்கநந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் 13.05.2019 நாளிட்ட விளக்க அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய தகவல்கள் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுவிட்டதாகவும், முறையீட்டு மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளவாறு திரு.வெள்ளைய்யாபிள்ளை மகன் திரு. பெரியசாமி என்பவர் 1972 முதல் மேற்படி வீட்டில் குடியிருந்து அதற்கான வீட்டு வரி செலுத்தி வந்துள்ளதாகவும், அதன் அடிப்படையிலேயே அவருக்கு ரசீது எண். 761/2012/நாள். 22.11.2012, முறையாக குடிநீர் கட்டணம் வசூலித்து குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி நபர் கட்டியுள்ள வீடு குடியிருப்பு பகுதி, குன்று மேட்டுத் தெரு வருவாய்த்துறை ஆவணங்கள் அடிப்படையில் அரசிடமிருந்து முறையாக பட்டா ஏதும் பெறப்படாததால் கட்டிட அனுமதி வழங்கப்படவில்லை எனவும், முறையீட்டு மனுதாரருக்கும் திரு.வெள்ளைய்யாபிள்ளை மகன் திரு. பெரியசாமி ஆகியோருக்கிடையே இடப்பிச்சிரனை காரணமாக முறையீட்டு மனுதாரர் தவறான புகார் அளித்துள்ளதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

26.06.2019 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.கே.சுந்தர்ராஜ் தனது வாக்குமூலத்தில் தான் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் 02.11.2016ல் சில தகவல்களை வடக்கநந்தல் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கேட்டதாகவும், அதற்கு தனி நபரை குறிக்கும் தகவல் என பதில் தர மறுத்து விட்டதாகவும், அதன் பிறகு பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு மேல் முறையீடு செய்ததாகவும், அவர்கள் உரிய கால கெடுவிற்குள் தகவல் அளிக்க ஆணையிட்டதாகவும் மேலும் 26.04.2017ல் மாநில தகவல் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததாகவும், கோரிய தகவல்களை 15 தினங்களுக்குள் தர பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டதாகவும் அதன்படி 10.03.2018ல் தனக்கு முழுமையாக தகவல் அளிக்காமல் ஒரு கேள்விக்கு மட்டும் செயல் அலுவலர் தகவல் அளித்ததாகவும், எனவே பேரூராட்சி செயல் அலுவலர் உறுதியளித்தவாறு தனக்கு முழுமையான தகவல் அளிக்க ஆணையிட கேட்டுக் கொண்டுள்ளார்.

26.06.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான வடக்கநந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் கோரிய தகவல்களை மாநில தகவல் ஆணையம் மனுதாரருக்கு வழங்க ஆணையிட்டதின்படி 13.03.2019 அன்று பேரூராட்சி மூலம் மனுதாரருக்கு அளிக்கப்பட்டது எனத் தெரிவித்து இப்பொருள் குறித்து ஒரு அறிக்கையினையும் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, வடக்கநந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம், வடக்கநந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் கூடுதல் அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய தகவல்களுக்கான உரிய பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டமைக்கான விவரங்களை பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கைகளில் சமர்ப்பித்துள்ளார்.

எனவே இந்நிலையில் மேற்படி தகவல்கள் குறித்து மேல்முறையீடு ஏதும் செய்யவேண்டுமென்றால் முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்ட விதிகளின்படி உரிய அமைப்பிற்கு மேல்முறையீடு செய்து உரிய தீர்வு காணலாம் எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இன்றையநாள் வழங்கப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

25/7/2019

பெறுநர்

1.திரு K. சுந்தர்ராஜ்,
த/பெ திரு.குள்ளப்பிள்ளை,
தாங்கல் ஏரி, காட்டுக்கொட்டாய்,
அக்கராபாளையம்,
வடக்கனந்தல் அஞ்சல்,
சின்னசேலம் (வழி)
விழுப்புரம் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
வடக்கநந்தல் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர் – 620007
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலாளரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.